Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 302

வியாழக்கிழமை
25 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## அத்துமீறிய மீன்பிடி
## 7 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

யாழ்ப்பாணம், செப். 25
அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக, ஸ்ரீலங்கா கடற்படையால் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஏழு பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட் 11

# காற்றாலைகள் வந்தால் கதிகலங்கும் மன்னார்!



ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவுக்கு மன்னார் பிரஜைகள் குழு கடும் கண்டனம்

**மன்னார், செப்ரெம்பர் 25**
**மன்னாரில் காற்றாலைத் திட்டங்களைத் தொடர்வதற்கு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அனுமதி வழங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது. இதுதான் ஜனாதிபதியின் முடிவாக இருந்தால், மண்ணை மீட்பதற்காக நாங்கள் முன்னெடுக்கப்போகும் போராட்டம் கதிகலங்கும் வகையில் அமையும் -இவ்வாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.** 11

## காற்றாலைத் திட்டத்தை உடனடியாகக் கைவிடுக



அரசுக்கு செல்வம் எம்.பி. எச்சரிக்கை

மன்னார், செப். 25
மன்னாரில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ள காற்றாலை மின்னுற்பத்தித் திட்டங்களை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும். இல்லையேல் போராட்டம் தீவிரமாகும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் 11

## கண்ணிவெடி அகற்றல் முகமாலையில் நிறைவு

யாழ்ப்பாணம், செப். 25
முகமாலையில் கடந்த பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவந்த கண்ணிவெடி அகற்றும் பணிகள் தற்போது முற்றாக நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதிப்போரின் பின்னர், முகமாலை, வேம்பொடுகேணி, இத்தாவில், கிளாலி ஆகிய பகுதி 11

கிளிநொச்சி மருத்துவமனையின்

## பெண் நோயியல் பிரிவு பயன்பாட்டுக்கு வந்தது!

கிளிநொச்சி, செப். 25
கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் பெண் நோயியல் பிரிவு, வடமாகாண ஆளுநரால் நேற்று மக்களின் பயன்பாட்டுக்காக ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை வளாகத்தில், நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் சுமார் 5 ஆயிரத்து 320 மில்லியன் ரூபா செலவில் பெண் 11

## ராஜபக்சக்களின் ஆட்சியில் முழுச் சுதந்திரம் இருந்தது!



*புலம்புகின்றார் அம்பிட்டிய சுமணரத்ன தேரர்*
*துயரத்தால் சுவரில் தலையை அடித்தாராம்*

கொழும்பு, செப். 25
ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் வடக்கு – கிழக்கில் முழுச் சுதந்திரத்துடன் செயற்பட்டோம். தற்போதைய அரசின் ஆட்சியில் அவ்வாறு செயற்படமுடியா 11



முச்சந்தி முரளி

“அடங்கியிருந்தவை எல்லாம் இப்ப இனவாத ஊளையிடத் தொடங்கிட்டினம் கண்டியளோ”

பொலிஸாரின் சுற்றிவளைப்பில்

## கசிப்புடன் தப்பியோடியவர் கிணற்றில் வீழ்ந்து பலி!

கிளிநொச்சி, செப். 25
கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கசிப்புக் காய்ச்சும் இடமொன்றை பொலிஸார் முற்றுகையிடச் சென்றபோது, அங்கிருந்து தப்பியோடி நபரொருவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தார். 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 11

மருத்துவத் தவறால் கை அகற்றம்

## தாதிய உத்தியோகத்தர் கைது; நாட்டைவிட்டு வெளியேறத் தடை

யாழ்ப்பாணம், செப். 25
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்ட சிறுமிக்கு, மருத்துவத் தவறால் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்ட விவகாரத்தில், இரண்டாவது சந்தேகநபரான தாதி கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். 11

வர்த்தக நிலையங்களுக்கு

## ஞாயிறுகளில் கட்டாயமான விடுமுறை!

பருத்தித்துறையில் முன்மாதிரி

சட்டத்தரணிகளின் முறைப்பாட்டைத் தொடர்ந்து

## மல்லாகம் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் பதவி விலகல்!

யாழ்ப்பாணம், செப். 25
மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் சுபறாஜினி ஜெகநாதனுக்கு எதிராக, மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத்தால் நீதிச் சேவை ஆணைக்குழுவில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து அவர் பதவி விலகியுள்ளார்.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 24.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4204 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 33 39 62 73 |
| விசேட எழுத்து | Q |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 24.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1271 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 15 35 37 47 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 24.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0230 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 1 6 3 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 24.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2310 |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 10 24 38 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 24.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5962 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 9 2 9 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 24.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1992 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 05 25 53 81 |
| விசேட எழுத்து | U |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 24.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0537 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 9 2 9 3 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 24.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0078 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 26 28 51 |

### இந்தியா நிதியுதவியில்

# முல்லை மருத்துவமனையில் நான்கு மாடி நோயாளர் விடுதி

## சுகாதார அமைச்சர் உறுதியளிப்பு

**முல்லைத்தீவு,செப்.25**


**முல்லைத்தீவு மாவட்டப் பொதுமருத்துவமனையில் இந்தியாவின் உதவியுடன் நான்கு மாடி நோயாளர் விடுதி வளாகத்தைக் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய ஒப்பந்தம் இந்தியாவுடன் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன்,

முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனையில் தற்போது முறையான ஆண் மற்றும் பெண் நோயாளர் விடுதிகள் இன்மையால் கட்டில்கள் நிரம்பி வழிகின்றன. பாய் விரித்துப்படுத்திருந்து நோயாளர்கள் மருத்துவம் பெறும் அவலநிலை காணப்படுகிறது. ஏனைய மாவட்டங்களைப் போன்று எமது மாவட்ட மருத்துவமனையில் நோயாளர் மருத்துவ விடுதிகளுக்கு முன்னுரிமையளித்து கட்டித்தர வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதிலளித்தபோதே சுகாதார அமைச்சர்,

முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனையில் இந்தியாவின் உதவியுடன் நான்கு மாடி மருத்துவ விடுதி வளாகத்தைக் கட்டவெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. திட்டமுன்மொழிவை செயற்படுத்தத் தேவையான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தொடர்புடைய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. அதன்படி குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்துக்குத் தேவையான விடுதி வளாகங்களைக் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் - என்றார். (ச-246,26)



### வவுனியாவில் திலீபனுக்கு சிலையமைக்கக் கோரிக்கை

#### மாநகர முதல்வருக்குக் கடிதம்

வவுனியா,செப்.25

வவுனியாவில் தியாகதீபம் திலீபனுக்குச் சிலை அமைப்பதற்கு இடம் ஒதுக்கித் தருமாறு கோரி, வர்த்தகர் எஸ். சிவரூபன், வவுனியா மாநகர முதல்வரிடம் கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

தமிழர்களுக்காக உணவு தவிர்த்து உயிர்நீத்த தியாகி திலீபனுக்கு சிலை அமைப்பதற்கு வவுனியாவில் உரிய இடம் ஒதுக்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தை ஏற்றுக்கொண்ட மாநகரமுதல்வர் சு. காண்டீபன், இந்தக் கடிதத்தை மாநகரசபை அமர்வில் சமர்ப்பித்துத் தீர்மானம் எடுக்கப்படும் -என்றார். (க-110)

### போதைப்பொருள் வலையில் கடற்றொழிலாளர்கள் சிக்கல்!

#### தடுப்பதற்கு வேலைத்திட்டம் கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.25

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் நடவடிக்கையில் சிக்காமல் இருப்பது எப்படி? என்பதுதொடர்பில்கடற்றொழிலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும்வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்குப் பணிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருடன் நடத்திய கலந்துரையாடலின்போது இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதன்போது கடற்றொழிலாளர்கள் போதைப்பொருள் கடத்தலுக்குக் கடத்தல்காரர்களாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துமாறு அமைச்சர் உத்தரவிட்டார். அதேபோல இதுபற்றிக் கடற்படையினருக்கும் தெரியப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் பிரதியமைச்சர் ரத்ன கமகே, அமைச்சின் செயலாளர் பி.கே. கோலித கமல் ஜினதாச மற்றும் துறைசார் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ச-26)



| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 24.09.2025 | புதன்கிழமை | 0670 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| H | 7 4 0 8 3 8 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.09.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2936 | K | 09 24 40 77 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.09.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 10 16 33 34 | 5097 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.09.2025 | புதன்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 07 23 34 54 | 4648 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 24.09.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 20 | 11 62 65 68 | 2112 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.09.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| J | 10 25 36 55 | 2762 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.09.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| | 47 50 51 55 | 2164 |

### யாழ்.நகரின்

# கழிவுநீர் முகாமைத்துவத்துக்கு ஆசிய வங்கியால் நிதியுதவி!

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்ப்பாணம் நகரத்தின் கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பான திட்டத்துக்கு எதிர்காலத்தில் நிதியதவி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள், வடக்கு மாகாண ஆளுநரிடம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் குடிதண்ணீர் விநியோகத் திட்ட அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் நிலைமைகள் மற்றும் திட்டத்தின் சில தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதன்போது குடாநாட்டுக்கான இரண்டாம் கட்டக் குடிதண்ணீர் விநியோகத்திட்டத்துக்கு உதவுவதற்குத் தயாராகவுள்ளோம். இதுதொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படுகின்றது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் ஆளுநருக்கு எடுத்துரைத்தனர். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில்

# குளோரின் உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கை!

**கொழும்பு, செப்.25**

**பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள வளாகத்தில் கோஸ்ரிக் சோடாக் குளோரின் உற்பத்தித் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியவள ஆய்வை வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயன நிறுவனம் பூர்த்திசெய்துள்ளது.**

தற்போது பரந்தன் இரசாயன நிறுவனம் குளோரின் இறக்குமதி செய்து நாடு முழுவதும் விநியோகிக்கின்றது. நாட்டின் நீர் சுத்திகரிப்புக்கான ஒட்டுமொத்தக் குளோரின் இறக்குமதி செய்யப்படுவதால்,உலகளாவிய விநியோகச் சங்கிலியில் தடைகள் ஏற்படும்போது, நீர் சுத்திகரிப்புக் கட்டமைப்பு முழுமையாக நிறுத்தப்படும் - நிலைமை காணப்படுகின்றது.

குளோரின் இறக்குமதிக்காக செலவாகும் வெளிநாட்டு செலாவணியைக் குறைத்துக்கொண்டு, நீர்ப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு குளோரின் உற்பத்தித் தொழிற்சாலையை உள்நாட்டிலேயே நிர்மாணிப்பது தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அடையாளங்காணப்பட்டுள்ளது.

உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், 95 நேரடி வேலைவாய்ப்புகளும் அண்ணளவாக 2 ஆயிரம் மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி அமைந்துள்ள காணியில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள 30 ஏக்கர் காணியில் உத்தேச கருத்திட்டத்தை அரச - தனியார் பங்குடமைக் கருத்திட்டமாக மேற்கொள்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் விருப்பக்கோரல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (எ-இ)

## மெஜிக்போலை விழுங்கிய 3 வயதுக் குழந்தை!!

யாழ்ப்பாணம், செப்.25

மெஜிக்போல் எனும் விளையாட்டுப்பொருளை வாயில் வைத்து விழுங்கிய 3 வயதுடைய குழந்தையொன்று சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட மெஜிக்போல் சிறிய பருப்பு அளவிலுள்ள பிளாஸ்ரிக் பொருளாகும். அது தண்ணீரில் ஊறியதும் பெரிய உருவமாக மாறும் தன்மை கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான பொருள்களை சிறுவர்கள் உள்ள இடங்களில் வைப்பதைத் தவிர்க்கவேண்டும் என்று மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-41-131)




## தங்கம் விலை ரூ. 3 இலட்சம் +

கொழும்பு, செப்.25

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் தினம் 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 3000 ரூபாவால் அதிகரித்து 3 இலட்சத்து 2,000 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. அத்துடன் 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 279,300 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## துரித அரச சேவைக்கு புதிய டிஜிற்றல் தளம்!



கொழும்பு, செப்.25

ஒரே டிஜிற்றல் தளத்தினூடாக, பொதுமக்களுக்கு அரச சேவைகளைத் தடையின்றி இலகுவாக அணுகுவதை நோக்கமாகக்கொண்டு அரச சூப்பர் செயலியை உருவாக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

தற்போதைய வகைப்படுத்தப்பட்ட அமைப்பு, பயநர்களை வெவ்வேறு முறைகளில் மீண்டும் தரவை உள்ளிடவும் பல அங்கீகார செயல்முறைகளுக்கு உட்படவும், பல்வேறு துறைகளுடன் ஈடுபடவும் கட்டாயப்படுத்துகிறது. இதனால் தாமதங்கள் மற்றும் சிரமங்கள் ஏற்படுகின்றன என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தத் திறமையற்ற தன்மை வருடத்துக்கு 500 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## ஆயுள்வேத வைத்தியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்



கொழும்பு, செப்.25

அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் ஆயுள்வேத வைத்தியர்களுக்கு மேலதிக கொடுப்பனவை வழங்கக் கோரி நேற்று வேலைநிறுத்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் கைதடி சித்தவைத்தியசாலைக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

இதன்போது ஆயுர்வேத வைத்தியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், மேலதிக கொடுப்பனவை உடன் வழங்கு, சம்பள மறுசீரமைப்பு எங்கே, நிர்வாகமே மமதை வேண்டாம் பிரச்சினைகளுக்குத் தீர்வைத்தா போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ச-20)

## போட்டியும் கலகமும் - 2

நேற்றுப் பட்சி சொன்னதில ஒரு சின்னத் திருத்தம். அந்த வடமாராட்சிப் பள்ளிக்கூடம் பாடின குழு இசைப்பாட்டுகளில முதல் மூண்டு பாட்டுகளிலையும் சாகித்தியம் இருந்தது. ஆனால் நாலாவதாப் பாடின பாட்டில 'சாகித்தியம்' எண்ட விசயம் இல்லையாம். ஆனால் அந்தக் குழு இசைப்போட்டிக்கு எந்தவிதமான 'பதவர்ணமும்' படிக்கலாம் எண்டுதான் ரூல்ஸ் இருக்கு. அதால இந்த நாலாவது பாட்டு பதவர்ணத்துக்க வரும், ஆனால் அதுக்கு சாகித்தியம் இல்லை. இதுதான் எல்லாக் குழப்பத்துக்கும் காரணம். அந்தப் பாட்டை செலக்ட் பண்ணின பள்ளிக்கூடக்காரர் இது பதவர்ணம்தானே எண்டும், "பதவர்ணத்தில சாகித்தியம் இருக்கோனும்" எண்டு யாழ்ப்பாணப் பள்ளிக்கூடக்காரரும் ஏட்டிக்குப் போட்டியா நிண்டதாலதான் இது மேல்நீதிமன்றத்தில வழக்கு வரைக்கும் போட்டுது.

அந்த வழக்கின்ர தீர்ப்பைப்பற்றி பட்சி விமர்சிக்கேலை. அந்தத் தீர்ப்பை வைச்சுக்கொண்டு இனிமேல் எப்பிடி உந்தப் போட்டியளை பிள்ளையளுக்குப் பாதிப்பு வராமல் வைக்கோனும். அதுக்கு உரியவை இன்னும் கவனமா இருக்கோனும். முக்கியமா போட்டியளுக்கு வாற நிகழ்ச்சியள் எல்லாம், சுற்றுநிருபத்தை மீறாமல் இருக்கோ எண்டு செக் பண்றதுக்கும் தனியா ஒரு குழுவை வைச்சிருந்தால், இப்பிடிப் போட்டி முடிவுகளை சந்தேகப் படவைக்காது. இந்தக் கண்காணிப்புக் கோட்டமட்டத்தில இருந்தே தொடங்கோனும். அப்பதான் எல்லாரும் விதியளைச் சரியாக் கடைப்பிடிக்க நினைப்பினம்.

இன்னொரு விசயம்,போட்டிக்கு நடுவரா இருக்கிறவையும் அந்தத் துறையில கெட்டிக்காரராவும், பக்கச்சார்பில்லாதவையாயும் இருக்கோனும். அப்பதான் அந்தப் போட்டி பற்றி ஏதும் சர்ச்சை வந்தால் அந்த இடத்திலையே நடுவர்மார் அதுக்கு விளக்கம் சொல்லி விசயத்தை சுமுகமா முடிக்கக்கூடியதா இருக்கும். முந்திக் கன போட்டியளில இப்பிடி விசயம் தெரியாதவையையும், சுற்றுநிருபத்தை வாசிச்சு போட்டி விதியளை அறிஞ்சுகொள்ளாதவையையும் நடுவர்களாப் போட்டதால கனக்கப் பிரச்சினை வந்தது. ஆனால் இந்தக் குழு இசையில இருந்த எல்லாருமே இசையில கெட்டிக்காரர்தான். ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பார்வை இருக்கும். அந்தப் பார்வைட்யும் ரசனையும் மாறுபடேக்கதான் இப்பிடி "அவைக்கு முதலாமிடம் குடுத்திருக்கலாம், நடுவர்மார் பக்கச்சார்பா நடந்திட்டினம்" எண்டு குறை சொல்லுப்படுறது.


இந்தக் குழு இசைப்போட்டியில வடமராட்சிப் பள்ளிக்கூடம் சார்பா பங்குபற்றின சிலர் திணைக்கள அதிகாரிமாரின்ர பிள்ளையள் எண்டும் அதாலதான் அவைக்கு வெற்றியைக் குடுத்தவை எண்டும் ஒரு கதை அடிபட்டது. ஆனால் போட்டியில பங்குபற்றுற பிள்ளையள் ஆர் எண்டோ அவையின்ர பின்னணி என்னெண்டோ நடுவர்மாருக்கும் தெரியாது,போட்டியை நடத்திறவைக்கும் தெரியாது. "நான் இன்னாரின்ர பிள்ளை" எண்டு அந்தப் பிள்ளையளும் நெத்தியில ஸ்ரிக்கர் ஒட்டிக்கொண்டு போட்டிக்கு வாறேலதானே. இப்பிடி "அதால தான் இப்பிடிச் செய்துபோட்டினம், இதாலதான் அப்பிடிச் செய்து போட்டினம்" எண்டு கற்பனைக் குதிரையளைப் பறக்கவிடாமல் , இனிமேல் இந்தப் போட்டியளை எப்பிடித் திறமா நடத்தி முடிக்கிறது எண்டு யோசிச்சால் புண்ணியமாப் போகும் கண்டியளோ.

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 04 . 1936

மறைவு 23 . 09 . 2025

## இராசையா திலகவதி

உரும்பிராயை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, மாரியம்மன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா திலகவதி அவர்கள் கடந்த 23.09.2025 அன்று மண்ணுலகை துறந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - முத்தம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சுப்பையா - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பையா இராசையாவின் அன்பு மனைவியும், சறோஜா, யசோதா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், முத்துகுமாரசாமி, திருநாவுக்கரசு, சந்திரசேகரம், கனகசபாபதி, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம், உதயகுமார் ஆகியோரின் மாமியாரும், செல்வலோசினி, செல்வராகினி, யுகாநந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: யுகாநந்
077 7819 352
075 5070 997

(CS 59747) A

## சொற்பொழிவு

சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் நடைபெறும் ஈழத்துச் சமயப் பெரியார்கள் குருபூஜை விழாவும் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இளஞ்சைவப்புலவர் பிரசங்கவாரிதி ச.நவநீதனின் "நவராத்திரி உணர்த்தும் வாழ்வியல்" எனும் விடயப் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (ச-41)

## காணவில்லை

### மகாலிங்கம் சரோஜா



ஆகிய இவர் நேற்று (24.09.2025) மதியம் 01.00 மணியளவில் 101, குளோப் மில் வீதி, பண்டாரிக்குளம் இல் காணாமல் போய்விட்டார்.

வயது 77, பொது நிறத்தை உடைய இவர் சிவப்பு நிற பற்றிக் சட்டை அணிந்திருந்தார்.

இவரை கண்டவர்கள் கீழ் தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

077 616 4062, 077 824 0716



யாழ் மறைமாவட்டத்தின் முதன்மையானதும் புராதனமானதுமான
புனித சிந்தாத்திரை அன்னை திருத்தல
வருடாந்த திருவிழா - 27.09.2025

சாட்டி கடலோரத்தில் அருள்பாலிக்கும் புனித சிந்தாத்திரை அன்னையின் திருத்தல திருவிழாவிலும் நற்கருணைப் பெருவிழாவிலும் கலந்து சிறப்பித்து அன்னையின் பரிந்துரையில் அருளாசீர் பெற்று வாழ உங்களை அன்புடன் அழைக்கின்றோம்!


**நற்கருணை விழா 26.09.2025 (வெள்ளி)**
மாலை 5.00 - மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்

**பெருவிழா 27.09.2025 (சனி)**
காலை 6.00 மணிக்கு திருச்செபமாலை
தொடர்ந்து கூட்டுத் திருப்பலி
யாழ் ஆயர், பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்

பரிபாலகர்

(CS/59478) J-1

# மரண அறிவித்தல்



## வேலாயுதம் தெய்வேந்திரன்

(உரிமையாளர் - ஜெயா வைண்டிங் வேக்ஸ், யாழ்ப்பாணம், ஜெயா பில்டிங், அரியாலை, யாழ்ப்பாணம், கொழும்பு)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் தெய்வேந்திரன் அவர்கள் கடந்த (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஜெயராணியின் அன்புக் கணவரும், டயஸ் (இத்தாலி), சுகிர்தா (லண்டன்), காலஞ்சென்ற சதீஸ் (லண்டன்) மற்றும் நகுலா (சுவிஸ்), டஜித்தா (ஆஷா- லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துஷ்யந்தி, செல்வமேனன், சத்தியராஜா ஆகியோரின் அன்பு மாமனும், ஜிரோமி, டிலோன், திஷாணா, அபீணா, ஜஸ்வன், விஷ்வஜித், வர்ஷா, அஷ்னா, ஜெய்ஷன், ஜெய்டன் ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள ஜெயா வைண்டிங் வேக்ஸ் நிறுவனத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மண்ணில் 25.11.1949

விண்ணில் 21.09.2025

670, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 643 0681

(CS/59469) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

கடமைக்கான அடிப்படைக் கொள்கை
சரியாக இல்லாவிட்டால்
செயலும் சரியானதாக இருக்கமுடியாது.

– டிஎட்வர்ட்ஸ் –

# அரச அத்துமீறலும் ஆக்கிரமிப்பே..!


வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச் சர் மஹிபால ஹேரத், அநுராதபுரத்தில் அரச திணைக்களத்துக்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்து அதில் ஆடம்பர விடுதியை அமைத்து வர்த்தகம் செய்துவந்தநிலையில், அந்த ஆடம்பர விடுதியையும், அதனுடன் தொடர்புடைய இதர கட்டடங்களையும் இடித்து அகற்றுமாறு உத்தர விடப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுர தலைமை யிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெ டுத்துவரும் ஊழல் மோச டிக்கு எதிரான செயற்றிட் டங்களில், இத்தகைய விடயங்களும் பிரதான மானவையே. ஆதலால், இந்த நடவடிக் கையை வாழ்த்துவதும் வரவேற்பதும் எமது கட மையாகும். ஆனால், 'இதே சட்டத்தை நிலைப்பாட்டை, அனைத்துச் சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிராகவும் அரசாங்கம் வரித்துக்கொள்ளுமா?' என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாத தாகின்றது.

யாழ்ப்பாணம் -தையிட்டிப் பகுதியில் பொது மக்களின் காணியை அடாத்தாக அபகரித்து 'ஆக் கிரமிப்பின் அடையாளமாக' திஸ்ஸ விகாரை அமை க்கப்பட்டுள்ளது. அந்த விகாரை பொது மக்களின் காணிக்குள்தான் அமைக்கப்பட்டுள் ளது என்பதை அமைச்சர் சந்திரசேகர் உட்பட அரசாங்கத்தின் பல்வேறு தரப்பினரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்றிருக்கின்றனர். ஆனால், ஆட்சிக்குவந்து ஒரு வருடமாகியும், இன்றளவும் அந்தச் சட்டவிரோத விகாரையின் ஒரு செங்கல் லைக்கூட அரசாங்கத்தால் நகர்த்தமுடியவில்லை என்பது வெட்கக்கேடானது. அரச காணிக்குள் சட்டவிரோதக் கட்டுமானங்களை அமைப்பதை ஆக்கிரமிப்பு என்றும், பாரதூரமான தவறு என்றும் நோக்கும் இதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தனியார் காணிக்குள் அமைக்கப்படும் 'விகாரை' என்னும் சட்டவிரோதக் கட்டடத்தின் மட்டில் காண்பிக்கும் மௌனத்தின் அர்த்தம்தான் என்ன? அத்து மீறலும், ஆக்கிரமிப்பும்தான் இங்கே விடயமே தவிர, விடுதியா அல்லது விகாரையா என்பது விடயமல்ல.

திஸ்ஸ விகாரை போல், வடக்குக் கிழக்கில் விரல்விட்டு எண்ணிவிட முடியாத உதாரணங்கள் எம்முன் பரந்து நீள்கின்றன. முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் எல்லைக் கிராமங்களில் வன உயிரிகள் திணைக்களத்தினரும், வன வளத் திணைக் களத்தினரும் மேற்கொள்ளும் அப்பட்டமான அத்துமீறலை இதற்குக் காத்திரமான மற்றொரு உதாரணமாகக் கொள்ள முடியும். பொதுமக்களின் பூர்வீகக் காணிக்குள் அடாத்தாக எல்லைக் கற்களை நட்டு பொய்யாக அடையாளப்படுத்திவிட்டு, தமது சொந்தக் காணிக்குள் விவசாய நடவடிக்கைகளை மேற் கொள்ளும் அப்பாவிப் பொதுமக்களை கைது செய்யும் அவலமும் இந்த நாட்டில்தான் நடந் தேறுகின்றது.

வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் ம ஹிபால ஹேரத்தின் சட்டவிரோத ஹோட் டலை இடித்தழித்து முன்மாதிரியாகத் தன்னைக் காட்டிய அரசாங்கம், வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர்களின் பலநூறு கேள்விகளுக்கு என்ன பதிலை வைத்துள்ளது? அரச காணிகளை தனியார் கைப்பற்றுவதும், அபகரிக்க முயல்வதும் மட்டும் ஆக்கிரமிப்பு என்றல்ல. தனியார் காணிக்குள் அரச கட்டமைப்பைச் சார்ந்த துறையினர் நுழை வதும் ஆக்கிரமிப்புத்தான். அது விகாரையாகவே இருந்தாலும்...!.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### தமிழ்த்தேசியக் கட்சிகளால்
# சேகரிக்கப்பட்ட கையெழுத்துகள் ஐ.நா. பிரதிநிதியிடம் கையளிப்பு



**கொழும்பு, செப்.25**
**தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து நடத்திய கையெழுத்துச் சேகரிப்புப் போராட்டத்தில் சேகரிக்கப் பட்ட கையெழுத்துகள் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிரான்சேவிடம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன.**

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவ லகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இந்தக் கையெழுத்துகள் கையளிக் கப்பட்டதுடன், தமிழ்த்தேசியக் கட்சி களின் தலைவர்கள் கையொப்ப மிட்ட கடிதமும் வழங்கப்பட்டது.
தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு விரைந்து நீதி நிலைநாட்டப்படவேண்டும் என் றும், செம்மணி உட்பட வடக்கு, கிழக்கில் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழிகளில் தொடர்ந்து அகழ்வு நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்படவேண்டும் என்றும், கண் டெடுக்கப்படும் ஆதாரங்களை உறுதிப்படுத்த சர்வதேச மேற்பார் வையுடன்கூடிய ஆலோசனை, தொழில்நுட்பம், பாதுகாப்பு வழங் குவது உட்படப் பல கோரிக்கைகள் இந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட் டுள்ளன. இந்த விடயங்களைச் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் நேரடியாகவும், ஐ.நா. வதிவி டப் பிரதிநிதியிடம் வலியுறுத்தி னர். (எ-இ)

# தேயிலைச் செய்கை 'கியூஆர்' இல் உரம்!

கொழும்பு, செப்.25
தேயிலைச் செய்கையா ளர்களுக்கு தாமதமின்றி உரிய நேரத்தில் தட்டுப்பா டில்லாமல் உரத்தைப் பெற்றுக்கொள்ள அரசாங் கம் நடவடிக்கை எடுத்துள் ளது. அதன்படி உரமானி யத்தை கியூஆர் குறியீடு முறைமூலம் பெற்றுக்கொ டுப்பதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது. இதற்காக தேயி லைச்சபையால் 2000 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடும் செய்யப் பட்டுள்ளது எனப் பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் சமந்த வித்யா ரத்ன தெரிவித்தார். (ச-இ)

# ஏற்றுமதி வருவாய் 11 பில்லியன் டொலர்

கொழும்பு, செப்.25
இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங் கையின் ஏற்றுமதி வரு வாய் 11 பில்லியன் டொல ரைக் கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதன்படி, இந்த ஆண் டின் முதல் எட்டு மாதங் களில் மொத்த ஏற்றுமதி வருவாய் 11,554.32 மில் லியன் டொலராகப் பதிவா கியுள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலகட் டத்துடன் ஒப்பிடும்போது 6.61 சதவீத அதிகரிப்பா கும். (ச-இ)



# இலங்கையில் நிலநடுக்கம்


பளை, செப்.25
ஹல்துமுல்ல, வெலன்விட்ட, அக்கரசியா, லெமஸ்தோட்ட, முருதஹின்ன மற்றும் பிற பகுதிகளில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை 6.46 மற்றும் 6.47 மணிக்கு ஒரு சிறிய நிலநடுக்கம் உணரப் பட்டதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இதனால் எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# பல்கலை மாணவர்களால் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப்.25
பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக் கப்பட்டது.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர் கள் பேஸ்லைன் வீதியை மறித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி னர். பட்டங்களுக்கான தெளி வான தகுதிகளையும், பட்டதாரி களுக்கான எளிமையான ஆட் சேர்ப்பு செயல்முறையையும் கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெ டுக்கப்பட்டது.
தமது பிரச்சினைகள் தொடர்பில் கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் பேச்சு நடத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், அது வெற்றியளிக்க வில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களால் தெரிவிக் கப்பட்டது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை- புரட்டாதி 10
26.09.2025
சுபநேரம் : 06.02 - 07.32
ராகுகாலம் : 10.32 - 12.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியாகதீபம் திலீபன் நினைவாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், குருதிக்கொடை முகாம் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முன்றலில் "உயிர் கொடுத்த உத்தமனுக்காய் உதிரம் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் நேற்றுப் புதன் கிழமை நடைபெற்றது. (ச-25,66)

# சர்வதேசப் பொறிமுறையூடாக இனவழிப்புக்கு நீதிவேண்டும்

## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.25**

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற தமிழின ஒடுக்குமுறை அட்டூழியங்களுக்கு ஐ.நா.வின் பொறிமுறை ஊடாக பரிகார நீதி வழங்கப்படவேண்டும். சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் எமக்குத் தீர்வு வருவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கிறன என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், 2009ஆம் ஆண்டும் இறுதியுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு 16 ஆண்டுகளாக நீதிக்காக தமிழினம் ஏங்கிக் கொண்டிருக்கின்றது. சர்வதேசம் எதையுமே செய்யாது என்ற விசமப் பரப்புரை மூலம் அழுத்தம் இல்லாத சூழலை உருவாக்க முயற்சிக் கின்றனர். நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்ற மமதையைவிட்டு முழுமையான தீர்வுக்கு அரசாங்கம் முன்வரவேண்டும். இனிமேல் இனப்படுகொலை நடைபெறாது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் ரோம் உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திடவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். சர்வதேசத்திடம் நீதியைக் கேட்கவும் தொடர்ந்து போராடவும் தமிழ்மக்கள் தொடர்ந்து பயணிக்க வேண்டும் - என்றார். (ச-இ)

# நல்லூர் மந்திரிமனை தமிழர்களின் சொத்து

## பாதுகாக்காவிடின் தொடர் போராட்டம்

யாழ்ப்பாணம்,செப்.25

நல்லூர் மந்திரிமனையைச் சரியான முறையில் பாதுகாக்கத் தவறினால் நல்லூர் மந்திரிமனைக்கு முன்பாகத் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படுமெனத் தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட தன்னார்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழர் மரபுரிமைச் சின்னமான நல்லூர் மந்திரி மனையைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தித் தன்னார்வலர்களின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை நல்லூர் மந்திரிமனைக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்துத்தெரிவித்த அவர்கள்,

நல்லூர் மந்திரிமனையைப் பாதுகாக்க வலியுறுத்தித் தனியே இலங்கை அரசையும், தொல்லியல் திணைக்களத்தையும் மாத்திரம் சுட்டிக்காட்டிப் போராட்டம் நடத்தப்படவில்லை. தமிழர் மரபுரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். மன்னர் சொத்தைப் பிடித்துவைத்திருப்பது அடாத்தானது என்பதனை அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும் என்றே வலியுறுத்துகின்றோம் -என்றனர். (ச-66)

# சிறுவர்கள் தண்டிப்புத் தவிர்ப்பு சட்டவரைவுக்கு அங்கீகாரம்!

கொழும்பு,செப்.25

சிறுவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் உடல் ரீதியான தண்டனைகள் மற்றும் மாணவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் தண்டனை முறைகளை முடிவுக் குக் கொண்டுவரும் நோக்கில், நாடாளுமன்றத்தில் இரண்டாவது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப் பட்டு, நிறைவேற்றப்படவுள்ள தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டவரைவுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் உடல் ரீதியான தண்டனைகள் உள்ளிட்ட குற்றச்செயல்களுக்கு சட்டரீதியாகத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இந்தச் சட்டவரைவு கொண்டுவரப்பட்டுள்ளது என்று மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நஜீத் இத்திக தெரிவித்துள்ளார். சிறுவர் தடுப்பு நிலையங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சிறுவர்களுக்கு வழங்கப்படுகின்ற உடல்ரீதியான தண்டனைகளை நிறுத்துவதற்கு, இலங்கையில் நீண்டகாலமாக சட்ட ஏற்பாடுகள் காணப்படவில்லை. இது தொடர்பில் பல்வேறு அரசியற்கட்சிகள், சர்வதேச அமைப்புகள் உள்ளிட்ட பல தரப்புகளால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்ட நிலையிலேயே, இந்தச் சட்டவரைவு முன்வைக்கப்பட்டது என்று சட்டம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். (க-இ)




# நூல் வெளியீடு

கொழும்பு, செப்.25

பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் அண்மையில் நடைபெற்றது.

எழுத்தாளர் வசந்த தயாபரன் தலைமையுரையையும் எழுத்தாளர் வி.ரி. இளங்கோவன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார்கள். தகவல் அறியும் உரிமை ஆணைகுழு உறுப்பினர் ஏ.எம். நஹறியா, கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் எஸ். ஜெய்சங்கர், சமூக, அரசியல் செயற்பாட்டாளர் யதீந்திரா, ஆய்வாளர் தெ.மதுசூதனன் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவி சுகந்தி இராஜகுலேந்திரா நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (ச-25)

# தே.ம.சக்தி ஆட்சியிலும் தமிழருக்கு ஏமாற்றமே!

## சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்குவந்து ஓராண்டு கடந்திருந்தாலும் தமிழ்மக்களின் முக்கியமான பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. தமிழ்மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றனர் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் மாகாணசபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படாமல் உள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் உறுதியளிக்கப்பட்டது. புதிய அரசமைப்பு சம்பந்தமாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால் இவை பற்றித் தற்போது கதைக்கப்படுவதில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் இருந்ததைவிடவும் மோசமான நிலைக்குச்சென்றுகொண்டிருக்கின்றது. கடந்தகால அரசுகள்கூட செய்யமாட்டோம் என வெளிப்படையாகக் கூறின. ஆனால் தாங்கள் இனவாதிகள் இல்லை, வடக்கு மக்கள்மீது தங்களுக்குதான் கரிசனை உள்ளது எனக் கூறிக் கூறியே எமது மக்களை ஏமாற்றிக் கொண்டுள்ளனர். இதைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. மக்கள் எதையும் சொல்லிவிடக்கூடாது என்பதற்காகவே யாழுக்கு அவசர அவசரமாக சென்று, சில அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன-என்றார். (எ-44)



# சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய உணவகத்துக்கு எதிராக வழக்கு

மன்னார்,செப்.25

மன்னார் நகரப் பகுதியில், சுகாதாரச் சீர்கேடுடன் இயங்கிய உணவகமொன்றுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்திருந்த குறித்த உணவகத்தில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் அசுத்தமாக உணவுகள் தயாரிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து மன்னார் நகர சபை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி, ஊழியர்களின் ஒத்துழைப்புடன் உணவகத்தை நேற்று முன்தினம் சோதனையிட்டார். குறித்த உணவகம் வியாபார உரிமம் இன்றி இயங்கியமை, உணவகத்தில் கழிவுநீர் தேக்கமடைந்திருந்தமை, ஆரோக்கியமற்ற முறையில் உணவுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை, உணவுப்பொருள்கள் பாதுகாப்பற்றமுறையில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தமை உள்ளிட்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இதனையடுத்து உணவகத்துக்கு எதிராக மன்னார் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (க-213, 56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழில் துறையில் 2026 இல் மறுமலர்ச்சி

அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.25

**ஒருங்கிணைந்த செயற்றிட்டத்தின் ஊடாக, அடுத்த வருடத்தில், நாட்டின் கடற்றொழில்துறையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த கடற்றொழில் அமைச்சு எதிர்பார்த்துள்ளது.**

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு மற்றும் மாகாணசபைகளின்கீழ் செயற்படும் கடற்றொழில் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, தேசியமட்டத்தில் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில், விசேட கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த இடம்பெற்றது.

மத்திய அரசுக்கும், மாகாணசபைகளுக்கும் இடையில் நிலவும் ஒருங்கிணைப்புக் குறைபாடுகளால், வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. இதனால் திட்டங்களின் வினைத்திறன் குறைவடைகின்றது. எனவே மத்தியஅரசு மற்றும் மாகாணஅதிகாரிகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைத்து, வள விரயத்தைத் தடுத்து, வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்று இதில் வலியுறுத்தப்பட்டது.

அதற்கமைய, தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை , மாகாண அமைச்சுக்களுடன் இணைந்து நீர்த்தேக்கங்களுக்கான ஒருங்கிணைந்த வர்த்தகத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், தன்னிறைவு அடையும் வகையில் நன்னீர் மீன் குஞ்சுகளை இருப்புச் செய்வதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.கே. கோலித கமல் ஜினதாச, அனைத்து மாகாண சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண பிரதம செயலாளர்கள், அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். (க-இ)



‘தியாகதீபம் திலீபன்’

## ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.25

மன்னார் மாவட்ட தாயகச் செயலணியின் ஒழுங்கமைப்பில் தியாகதீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டித்தொடர் மன்னார் வேட்டையாமுறிப்பு வள்ளுவர் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகமும், சின்னப்பண்டிவிரிச்சான் சென் சேவியர் விளையாட்டுக்கழகமும் மோதின. அதில் சின்னப்பண்டிவிரிச்சான் சென்சேவியர் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி தியாகதீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டு வெற்றிக்கிண்ணத்தை கையளித்தார். (ச-246)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, நெடுந்தீவு பிரதேசசபையால் கயிறுஇழுத்தல், கிடுகு பின்னுதல் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் நடத்தப்பட்டன. (க-17)

## ஈ.ரி.எப். நிறுவனத்தினால் புலமைப்பரிசில் நிதியுதவி

யாழ்ப்பாணம், செப்.25

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் செயலூக்கமுள்ள உறுப்பினர்களின் பிள்ளைகள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்திருப்பின் அவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

மாவட்ட ரீதியில் 9 ஆயிரம் மாணவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படும். ஈ.ரி.எப் நிறுவனத்தில் உறுப்பினர்களாகவுள்ளோரின், சித்திபெற்ற பிள்ளைகள் இதற்காக விண்ணப்பிக்கலாம். www.etfb.lk எனும் தளத்தில் பிரவேசித்து அடுத்தமாதம் 31ஆம் திகதிக்குமுன் நிழ்நிலையில் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0117747200, 0117747 281, 0117747282 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அறிவித்துள்ளது. (ச-25)

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதியை நிலைநாட்டுக

சஜித் வலியுறுத்து

கொழும்பு,செப்.25

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதியான விசாரணையை கோருகின்றனர். எனினும், நிலைமை தற்போது பாரதூரமாகியுள்ளது. ஜெனீவாவில் தற்போது நடந்துவரும் கலந்துரையாடலில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றின் தந்தை தொழில்நுட்பம் மூலம் இணைந்துக்கொண்டு, இலங்கையில் நடந்துவரும் விசாரணைகளில் திருப்தி இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். இதுபோன்ற விடயங்கள் நாட்டுக்குப் பொருத்தமில்லாத விடயங்கள் என்பதால், இங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-44)

## உலக அஞ்சல் தின விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம் செப்.25

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகம் நடத்தும் வடமராட்சிக்குட்பட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் பருத்தித்துறை அஞ்சலதிபர் யோகராணி வல்லிபுரநாதன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்து

பிரதமவிருந்தினராக வடக்குமாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி நாயகம் நிவேதிகா கேதீசன் கலந்துகொள்ளவுள்ளார் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச அஞ்சல் அத்தியட்சர் அனுராத பொர்ணான்டோ, பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் எம்.பி.தயானந்தன், பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வி.டக்ளஸ் போல், பருத்தித்துறை பொலிஸ்நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (40)

## பளை இளைஞர் கழகம் எல்லே போட்டியில் வெற்றி



பளை, செப் 25


தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக நடத்தப்பட்ட மாவட்டமட்ட 35 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஆண்களுக்கான எல்லே போட்டியில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனஅணி சம்பியனைத் தனதாக்கிக்கொண்டது.

இதன்மூலம் இந்த அணி தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. குறித்த போட்டி கிளிநொச்சிமாவட்ட ரீதியாக கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. (ச-25, 9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கடந்த க.பொ. த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச-25. 9)



சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் செம்மணி மனித புதைகுழி தொடர்பான திறந்த கலந்துரையாடல் யாழ்.பரியோவான் கல்லூரிக்கு அருகில் புனித யோவான் தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-25,20)


## சிங்களமொழி பயிற்சிநெறி இறுதிநாள் கலை நிகழ்வு

சாவகச்சேரி, செப். 25

அரச உத்தியோகத்தர்களுக்கான 150 மணி நேர இரண்டாம் மொழி சிங்களப் பாடநெறியின் இறுதிநாள் கலை நிகழ்வு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக செயலர் க.சிவகரன், யாழ். உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ. தர்ஷினி, இரண்டாம் மொழி சிங்கள வளவாளரான சச்சிதானந்தம் நந்தன், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நடராஜா உமாநாத் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ 25,9)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் வியாபாரத் திட்டம் தயாரித்தல் தொடர்பான பயிற்சிநெறி பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ச.குணஜா தலைமையில் நடைபெற்ற பயிற்சிநெறியில் வளவாளராக கிளிநொச்சி மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் இராமபிரியந்தன் கலந்துகொண்டார். (ச-25, 9)




# வழிகாட்டல் கருத்தரங்கு

சாவகச்சேரி, செப்.25

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர் யுவதிகளுக்கான தொழில் திறவுகோல் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திறன் விருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 9)





தென்மராட்சிப் பிரதேசமட்ட சிறுவர் கண்காணிப்புக்குழுக் கூட்டம் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் எவ். சீ சத்தியசோதி தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ச-25.9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## பெண்கள் துடுப்பாட்டப் போட்டி தெல்லிப்பழை அணி சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.25

35ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்ட ரீதியிலான பெண்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச அணி சம்பியனாகியுள்ளது.

நெல்லியடி கொலின்ஸ் மைதானத்தில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதிச்சுற்றில் தெல்லிப்பழைப் பிரதேச அணி, கரவெட்டி அணியுடன் மோதியது. போட்டியில் கரவெட்டி அணி 28 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில், 29 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு களமிறங்கிய தெல்லிப்பழைப் பிரதேச அணி 2.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஆட்டமிழப்பு எதுவுமின்றி வெற்றிபெற்று சம்பியனாகியது. (ச-41-20)

## பலவந்தம் பிரயோகித்தால் விளைவு பாரதூரமாகும்

*அரசாங்கத்தை எச்சரிக்கும் நாமல்*

கொழும்பு, செப்.25

தொழிற்சங்கத்தினரைப் பலவந்தமாக அடக்க முயற்சித்தால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக மாறும் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும். 1889, 1988 ஆம் ஆண்டுகளில் செயற்பட்டதைப் போன்று தற்போது செயற்படமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதியின் ஒருவருட ஆட்சியில் நாட்டின் விவசாயம், கடற்றொழில் ஆகிய துறைகளின் வளர்ச்சி பின்னடைந்துள்ளது. அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்து மக்களுக்கு உணவளிக்கலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்துக்கொண்டு அரசாங்கம் செயற்படுகிறது. இலங்கை மின்சாரசபை ஊழியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுகிறார்கள். கடந்த அரசாங்கம் இயற்றிய மின்சாரசபைச் சட்டம் இரத்துச்செய்யப்படும் என்று மின்சார சேவையாளர்களுக்கு வாக்குறுதியளித்தீர்கள். அழகான நாடு செழிப்பான வாழ்க்கை என்று குறிப்பிட்டுக்கொண்டே அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இந்த ஒருவருட காலத்தில் மக்கள் செழிப்பாகவில்லை- என்றார். (எ-இ)

# ஈழத்தமிழரின் மனங்களில்: கொழுந்துவிட்டெரியும் தியாகதீபம் திலீபன்



■ விஜயகுமார் ஜிந்துஜா

ஈழத் தமிழரின் உரிமைக்கான போராட்ட வரலாற்றில், சில பெயர்கள் காலத்தால் அழியாத தியாகத்தின் அடையாளங்களாக நிலைபெற்றுவிட்டன. அத்தகைய ஒரு பெயர், தியாகதீபம் திலீபன். அவரது 38 ஆம் ஆண்டு நினைவுதினம் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்தவேளையில், திலீபனின் தியாகம் ஏன் இன்றும் ஈழத் தமிழரின் மனங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதை நாம் மீண்டும் சிந்திப்பது அவசியம்.

மருத்துவர் ராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயரைக் கொண்ட திலீபன், யாழ். இந்திய அமைதிப்படைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது முன்வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்ற வலியுறுத்தி, 1987 செப்ரெம்பர் 15 அன்று சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். நீர் கூட அருந்தாமல், தனது உயிரைத் துச்சமென மதித்து அவர் மேற்கொண்ட அந்தப் போராட்டம், வெறும் ஒரு தனிநபரின் உண்ணாநோன்பு அல்ல; அது ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தையும், அகிம்சைவழியின் வலிமையையும் ஒருசேர உலகுக்கு உணர்த்திய ஒரு வரலாற்று நிகழ்வு.

திலீபன் இறந்து 38 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், ஒவ்வொருவரின் மனதிலும் இன்றும் திலீபன் நினைவுகூரப்படுகிறார். அதற்குக் காரணம் அவரின் தூய்மையான தியாக உள்ளம் என்று சொன்னால் அது மிகையாகாது. அவர் தனது போராட்டத்தின் மூலம் வழங்கிய சில பிரதான செய்திகளில் ஒன்று அகிம்சையின் வலிமை. ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்திருந்த ஒரு காலகட்டத்தில், திலீபன் அகிம்சைவழியைத் தேர்ந்தெடுத்தது. ஈழப் போராட்டத்தின் பரிமாணங்களை உலகுக்கு வேறு கோணத்தில் காட்டியது. இது, அறவழியில் போராடிய காந்தியத்தின் நீட்சியாகவே பார்க்கப்படுகிறது. அந்தவகையில் திலீபனின் உண்ணாவிரதம், ஈழத்தமிழர்களின் ஒட்டுமொத்த மனசாட்சியாக மாறியது. அவர் நீரின்றி வாடிய ஒவ்வொரு நொடியும், ஈழத் தமிழர்கள் அனுபவித்த துயரத்தின் ஒரு குறியீடாக அமைந்தது. இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு வந்து ஆதரவு அளித்ததும், அவரது தியாகத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியது. ஒரு போராளியாக இருந்தும், தனது மக்களின் நலனுக்காக அதிகாரத்தை அணுகி, அகிம்சை வழியைத் தேர்ந்தெடுத்த அவரது தலைமைப் பண்பு, இன்றும் இளைஞர்களுக்கு ஒரு உத்வேகமாகத் திகழ்கிறது.

இன்றைய நவீன உலகில், சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் பல்வேறு செய்திகளுக்கு மத்தியில், உண்மையான தியாகங்களின் மதிப்பை நாம் மறந்துவிடக் கூடாது. திலீபனின் தியாகம் ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு, தனது இலக்கை அடைய எந்த அளவு அர்ப்பணிப்புத் தேவை என்பதை உணர்த்தும் ஒரு பாடமாக உள்ளது. எத்தகைய இக்கட்டான சூழலிலும், அமைதி வழியில் நியாயம் கோரமுடியும் என்பதற்கான சான்றாக நிற்கிறது. சர்வதேச உறவுகள், அமைதிப் பேச்சுவார்த்தைகள் மற்றும் மனித உரிமைகள் பற்றிய உரையாடல்களில், திலீபனின் வாழ்க்கை ஒரு முக்கியமான எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தப்படவேண்டும். தியாகதீபம் திலீபன் வெறும் ஒரு பெயர் அல்ல, அவர் ஒரு வரலாற்றுப் பாடம். அவரது 38 ஆம் நினைவு தினத்தில், நாம் அவரது தியாகத்தை வெறும் சடங்காகக் கொண்டாடாமல், அவரது இலட்சியங்களை அறவழியிலான போராட்டம், மக்களின் உரிமைக்கான அர்ப்பணிப்பை நமது வாழ்வில் எவ்வாறு கடைப்பிடிக்கலாம் எனச் சிந்திக்கவேண்டும். திலீபன் அன்று ஏற்றிய தியாகதீபம், ஈழத்தமிழரின் மனங்களில் இன்றும் அணையாத ஒளியாகச் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

## திலீபன் நினைவு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.25

தியாகதீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள "தமிழ்த்தேசிய அரசியலில் இளைஞர்களின் வகிபாகம் மற்றும் தமிழ் மக்களின் அறிவுசார் நிலைத்திருப்பு" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை வெள்ளிக் கிழமை பி.ப.ஒரு மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. கலந்துரையாடலில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரை யாளர்கள், பேராசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தியாகதீபம் திலீபனின் 10ஆம் நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப்.25

தியாகதீபம் திலீபனின் 10ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நேற்றுப்புதன்கிழமை யாழ்.நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியடியில் இடம்பெற்றது.

இதன்போது முன்னாள் போராளி தயாபரன் சுடரேற்றியதுடன் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டு திலீபனின் உருவப் படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-41-66)

## குருக்கள்மடம் புதைகுழி அகழ்வின் செலவு அறிக்கை அமைச்சுகளுக்கு

மட்டக்களப்பு, செப்.25

குருக்கள்மடம் மனிதப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைக்குத் திட்டமிடப்பட்டுள்ள செலவு நிதி அறிக்கையை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் ஊடாக நிதி மற்றும் நீதி அமைச்சுகளுக்கு அனுப்புமாறு களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றம் பணித்துள்ளது.

குருக்கள்மடம் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கடந்த 11ஆம் திகதி கொழும்பு பிரதம சட்ட மருத்துவ அதிகாரியால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட செலவு நிதி அறிக்கை தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதா என்பது ஆராயப்பட்டது. செலவு நிதி அறிக்கையை ஏற்றுக் கொண்ட களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றம் அந்த அறிக்கையை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் ஊடாக நிதி மற்றும் நீதி அமைச்சுகளுக்கு அனுப்புமாறு கட்டளையாக்கியது. (எ-இ)


## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி லூட்வின் கிறிஸ்ரா மரியதாஸ் தி.கு**

யாழ்ப்பாணம். ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி லூட்வின் கிறிஸ்ரா மரியதாஸ் தி.கு. அவர்கள் (23.09.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அருட்சகோதரியின் பூதவுடல் இன்று (25.09.2025) வியாழக்கிழமை 121. பிரதான வீதியில் அமைந்துள்ள திருக்குடும்ப மாகாண இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை மறுதினம் (27.09.2025) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி ஜொய்லின்றாஜி ஸ்ரன்லி
மாகாணத் தலைவி.
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(CS/4085) J-1

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் மாந்தருடன்
18 . 11 . 1969



விண்ணுலகில் மாதவனுடன்
20 . 09 . 2020


**அமரர் லயன் P.K பாலசிங்கம் பாலஸங்கர்**

ஓங்கி வளர்ந்த தேகம் ஒளிபரப்பும் அரிய
கண்கள் தாங்கியே அனைவர்க்கும்
தயவு செய்யும் திருக் கரங்கள்
பாங்கிலுயர் பண்புடையார் பாசத்தின்
வடிவுடையார்
ஏங்கியழ எமைவிடுத்து ஆண்டு ஐந்து
ஆனதுவே அப்பா!

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 05 . 1935



மறைவு
23 . 09 . 2025

**நடராசா ஏரம்பமூர்த்தி (கிளாக்கர்)**

மறவன்புலோவை பிறப்பிடமாகவும், கைதடி மேற்கு மானிப்பாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நடராசா ஏரம்பமூர்த்தி அவர்கள் கடந்த (23.09.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - அமிர்தவல்லி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருச்செல்வியின் அன்புக் கணவரும், சிவகேஜினி (ஜேர்மனி), மதிவதனி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மங்களம்மா, ஞானம்பிகை, சோதீஸ்மதி, யோகீஸ்வரன், குமாரதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற நாகம்மா, பரமேஸ்வரி, ஜெயரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், செல்வாஸ் (ஜேர்மனி), திலகேசன் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், டிலக்ஷயா, சயானா, தருண் (ஜேர்மனி), மஞ்சரி, தெஜஸ், மித்திரா (நோர்வே) ஆகியோரின் அன்பு பேரனும், உமாபதி, குமணன், நமணன், லைக்குமாரன், மைதிலி, மனோகரி, கனநாதன், கணஈசன், கலைமதி, கணராசன் ஆகியோரின் மாமனாரும், ஜனனி, சிவரூபன், நிஷாந்தன், கஜேந்திரன், ஜீவிக்கா, சசிதா, காயத்திரி ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.08.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கைதடி மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 130 3789

கைதடி மேற்கு,
கைதடி.

## இருபத்தோர் ஆண்டுகளாய் இதயமதில்...

தோற்றம்
17 . 04 . 1953



மறைவு
18 . 09 . 2004

**அமரர் திலகவதி குமரவேல்**

(முன்னாள் பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்)

திதி: சதுர்த்தி (25.09.2025)

கண்ணை இமை காப்பது போல்
நிதம் எம்மைக் காத்த அம்மா
நிழலாக மாறியதை - இன்றும்
நினைத்து நாம் ஏங்குகின்றோம்!
அலைபாயும் நினைவலைகள்
இருபத்தோர் ஆண்டுகளாய் எம் இதயமதில்...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(CS/4087) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றாலைகள்...

காற்றாலைகளுக்கு எதிரான போராட்டக் களத்தில்வைத்து நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மன்னாரில் காற்றாலைகளை அமைக்க வேண்டாம் என்றும், கனிய மணல் அகழ்வை நிறுத்துமாறு கோரியும் நாங்கள் மேற்கொண்ட போராட்டம் இன்றுடன் 53ஆவது நாளாகத் தொடர்ந்து வருகின்றது. மக்களின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்படமாட்டேன் என்று கூறிய ஜனாதிபதி அநுர, காற்றாலைக் கோபுரங்களை அமைக்கும் பணிகளைத் தொடருமாறு மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் என்று அறிகின்றோம்.
மக்களின் கருத்துகளைப் புறக்கணித்து, மக்களின் விருப்பத்துக்கு மாறாக, மிகவும் தன்னிச்சையான முடிவில் ஜனாதிபதி அநுர செயற்பட்டுள்ளார். ஜனாதிபதியின் இந்த உத்தரவு மன்னார் மக்களுக்கு மிகுந்த வேதனையையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் முடிவு இதுதான் என்றால், எங்களின் போராட்டம் விரிவடைகின்றது என்பதை உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களின் பிரதிநிதித்துவங்களையும் பெற்று பெரும் போராட்டமாக இந்தப் போராட்டத்தை மாற்றுவோம்.
அத்துடன், மக்களுக்கு விரோதமான இந்தத் திட்டங்களுக்கு மன்னார் மாவட்டச் செயலகத்தினரும், அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனரா? என்ற சந்தேகமும் எமக்கு ஏற்பட்டுள்ளது - என்றார். (அ-ம-56)

## காற்றாலைத்...

செல்வம் அடைக்கலநாதன் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:
மன்னாரில் காற்றாலைத் திட்டங்கள் வேண்டாம் என 50 நாள்களுக்கு மேலாக மக்கள் போராட்டம் நடத்திவருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் செயலகத்துக்கு முன்பாகவும் மன்னார் மக்களும், சிவில் அமைப்பினரும் போராட்டம் நடத்தியிருந்தனர். ஆனால், இந்தப் போராட்டங்களையெல்லாம் கருத்திற்கொள்ளாத ஜனாதிபதி அநுர, காற்றாலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்களையும் அனுமதியையும் வழங்கியுள்ளார்.
மன்னார் மக்களின் வாழ்வுரிமையை இந்த அரசாங்கம் மறுத்து வருகின்றது. மக்களின் இறையாண்மையை அரசாங்கம் மீறுகின்றது. இது நியாயமா? என இந்த உயரிய சபையில் கேட்கின்றேன்.
தற்போதைய ஜனாதிபதி போராட்ட இயக்கமொன்றில் இருந்து வந்துதான் இன்று அரசாங்கத்தின் தலைவராகியுள்ளார். ஆனால் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கி, எமது மக்களின் உயிரை துச்சமென மதிக்கும் வகையிலேயே செயற்படுகின்றார். இவ்வாறான செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக மன்னார் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடரும். இனிவரும் நாள்களில் கூடுதல் வீரியத்துடன், அதிகளவான மக்களுடன் அந்தப் போராட்டங்களை முன்னெடுப்போம் - என்றார். (அ-ம-44)

## 7 இந்திய...

டுள்ளது.
கடந்த 13ஆம் திகதி மேற்படி ஏழு மீனவர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்காக வந்தது. மீனவர்கள் அனைவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து, அவர்களுக்கு 6 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்றத் தீர்ப்பின்படி, எதிர்வரும் 6 வருடங்களுக்குள் மேற்படி 7 மீனவர்களும் மீண்டும் அத்துமீறி மீன்பிடித்தால், அவர்கள் தற்போது விதிக்கப்பட்டுள்ள இரு வருட சிறைத்தண்டனையையும் சேர்த்து அனுபவிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## கண்ணிவெடி...

களில் இருந்து கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. கடந்த 14 வருடங்களாக சுமார் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ள நிலையில், அந்தப் பணிகளை முன்னெடுத்த 'ஹலோ ரஷ்ட்' நிறுவனம் தற்போது இறுதிக்கட்டப் பணிகளையும் நிறைவுசெய்து அங்கிருந்து வெளியேறியுள்ளது.
கண்ணிவெடிகள் காரணமாக விடுவிக்கப்படாமல் இருந்த காணிகளை விடுவிப்பதற்கும் தற்போது நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ச-9)

## பெண்நோயியல்...

நோயியல் மருத்துவ மையம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த சிகிச்சைப் பிரிவு, முன்னாள் ஜனாதிபதி ரணிலால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் திறந்துவைக்கப்பட்டபோதிலும், பல்வேறு காரணங்களால் மக்களின் பயன்பாட்டுக்கு வரவில்லை.
இவ்வாறான நிலையிலேயே, குறித்த சிகிச்சைப்பிரிவு நேற்று மக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. ஆளுநரின் செயலாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-55,113)

## ராஜபக்சக்களின்...

துள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர்.
தற்போது நடப்பவற்றைப் பார்த்து, துயரத்தின் உச்சத்தால் சுவரில் தலையை அடித்தேன் என்றும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், எப்படியான சவால்கள் வந்தாலும் எமது நாட்டின் வீரம் மிகுந்த தலைவர்கள் தொடர்பிலும், சிரேஷ்ட தலைவர்கள் தொடர்பிலும் நாங்கள் கதைப்போம். ஏனெனில் பௌத்த சாசனத்தை அவர்கள் பாதுகாத்துள்ளனர். மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்திலும், கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திலும் எமக்கு எவரிடமும் அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கவில்லை. வடக்கு, கிழக்கில் முதுகெலும்புடன் செயற்பட்டு பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தோம்.
அதேபோல், தொல்லியல் இடங்களை பாதுகாப்பதற்குரிய வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தோம். ஆனால் தற்போது அவற்றின் மீதான பிடிமானங்களை இழந்துள்ளோம். இது தொடர்பாகக் கதைக்கும்போது எம்மை அரசாங்க எதிர்ப்பாளர் என்று கூறுகின்றனர். சில கட்சிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்றோம் என்றும் விமர்சிக்கின்றனர். நடப்பவற்றைப் பார்த்து துயரம் தாங்க முடியாது, தலையை சுவரில் அடித்துக்கொண்டேன். நான்கு நாள்கள் மருத்துவமனையில் இருந்தேன். ஆனால் வழுக்கி விழுந்தேன் என பொய்கூறினேன். துயரம் தாங்காது தலையை சுவரில் அடித்துக்கொண்டேன் என்பதே உண்மை. அரசியல் சாசனத்தைப் பாதுகாப்பதற்கான உரிமையை அரசாங்கம் எமக்கு வழங்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

## தாதிய...

அவர் நாட்டைவிட்டு வெளியேற முடியாத வகையில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சாண்டில்யன் வைசாலி என்ற சிறுமி காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மணிக்கட்டில் ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாள்களில் மணிக்கட்டு வீக்கமடைந்து பின்னர் அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது.
இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் உசைன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.
இதன்போது, பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளான கு.புரந்திரன் ,செ.லக்சன் ஆகியோர் பல்வேறு விடயங்களை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர். வழக்கின் விசாரணைகள் மந்தகதியில் இடம்பெறுகின்றன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.
முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான், இது தொடர்பான மேலதிக அறிக்கைகளை தாக்கல் செய்யுமாறும், விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய தரப்புக்கு உத்தரவிட்டிருந்தார்.
இதையடுத்து, அந்தத் தாதிய உத்தியோகத்தர், சிறுவர், பெண்கள் பிரிவால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அந்தத் தாதிய உத்தியோகத்தருக்குப் பிணை வழங்கிய நீதவான், அவர் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாதவாறு பயணத்தடை விதித்துள்ளார். (அ-ம-26)

## ஞாயிறுகளில்...

யாழ்ப்பாணம், செப். 25
பருத்தித்துறை நகரப் பகுதியில் இயங்கிவரும் அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும், கட்டாய அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை விடப்பட வேண்டும் என்று பருத்தித்துறை வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.
பருத்தித்துறை நகரப் பகுதியில் இயங்கிவரும் அத்தியாவசிய மற்றும் அவசர தேவைகளுடன் தொடர்புடைய உணவகங்கள், மருந்தகங்கள், சைக்கிள் திருத்தகங்கள் தவிர்ந்த, ஏனைய சகல வர்த்தக நிலையங்களுக்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாய விடுமுறை வழங்குவதற்கு பருத்தித்துறை வர்த்தக சங்கம் அண்மைய நாள்களாக நடவடிக்கை எடுத்திருந்தது.
இது தொடர்பில் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுடன் குழுவாகவும், தனித்தனியாகவும் பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை வர்த்தக சங்கம் நடத்தியிருந்தது. இதன் தொடர்ச்சியாகவே, பிரதி ஞாயிறுகளில் கட்டாய அடிப்படையில் வர்த்தக நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பண்டிகைக்காலங்களில் மட்டும் விதிவிலக்கு பேணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

## கசிப்புடன்...


மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-26,113)

## மல்லாகம்...

களை வெளிப்படுத்தவில்லை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுகளை முன்வைத்து, மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவானுக்கு எதிராக நீதிச்சேவை ஆணைக்குழுவில் மல்லாகம் சட்டத்தரணிகளால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.
இது தொடர்பான விசாரணைகள் நீதிச்சேவை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிலையில், குறித்த நீதவான் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளார். அவரின் பதவி விலகல் நீதிச்சேவை ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
இதைத் தொடர்ந்து, மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் மல்லாகம் நீதிமன்றத்துக்கு நேற்றுக்காலை சென்று, பதவி விலகிய நீதிபதியின் சமாதான அறை மற்றும் அதிலுள்ள பொருள்களைப் பொறுப்பேற்று நீதிமன்றப் பதிவாளரிடம் கையளித்தார். (அ-ம-26 66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பயணிகளுக்கான இலங்கை வங்கியின் பல நாணயப் பயண அட்டை




இலங்கை வங்கி (BOC) வெளிநாடுகளுக்குப் பயணிக்கும் இலங்கையர்களுக்காக ஒரு புதிய டிஜிட்டல் தீர்வை அறிமுகப்படுத்தியுள்ளது. பல நாணயப் பயண அட்டை (Multi-Currency Travel Card - MCTC) என அழைக்கப்படும் இந்தத் தயாரிப்பு, சர்வதேசப் பயணிகள் தங்கள் வெளிநாட்டு நாணயத் தேவைகளை எளிதாகவும் பாதுகாப்பாகவும் நிர்வகிக்க உதவுகிறது.

இந்த அட்டை ஒரு முற்கொடுப்பனவு டிஜிட்டல் பயண அட்டையாகும். இதன் மூலம், பயணிகள் அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண்ட், ஜப்பானிய யென், யூரோ மற்றும் ஆஸ்திரேலிய டொலர், முதலான ஐந்து முக்கிய சர்வதேச நாணயங்களை ஒரே அட்டையில் பயன்படுத்தலாம் என்பதோடு பல்வேறு வகையான பணத்தாள்களை எடுத்துச் செல்லும் சிரமத்தையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

பயணிகள் இந்த அட்டையில் 25,000 அமெரிக்க டொலர் வரை பணத்தைச் சேர்க்க முடியும். மேலும், ஒரு சுய-சேவை இணையதளம் (self-care portal) வழியாக நாணயங்களுக்கு இடையில் மாற்றிக்கொள்ளும் வசதியும் உள்ளது. இந்த அம்சம், மாற்று விகிதங்களை நிர்வகிக்கவும், சிறந்த நிதிக் கட்டுப்பாட்டைப் பெறவும் உதவுகிறது. வாடிக்கையாளர்களுக்கு அதிக பயனை வழங்குவதற்காக இலங்கை வங்கி போட்டித்தன்மை வாய்ந்த மாற்று விகிதங்களையும் வழங்குகிறது.

இந்த அட்டை மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் வருகிறது. பிரதான அட்டை தொலைந்து போனால், திருடு போனால் அல்லது சேதமடைந்தால் கூட பணத்தைப் பயன்படுத்தும் வகையில் ஒரு இலவச மேலதிக அட்டை (backup card) வழங்கப்படுகிறது. நிகழ்நேரப் பரிவர்த்தனை கண்காணிப்பு (real-time transaction tracking), இணையவழிக் கட்டணங்களுக்கான 3D பாதுகாப்பு, மற்றும் மோசடிக்கு எதிரான பாதுகாப்பிற்கான EMV Chip ஆகியவை இதர பாதுகாப்பு அம்சங்கள் ஆகும். அத்துடன், இந்த அட்டை NFC தொழில்நுட்பத்தை கொண்டுள்ளதால், தொடர்பு இல்லாத கட்டணங்களை (contactless payments) மேற்கொள்ளலாம். ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் வாடிக்கையாளர்களுக்கு உடனடி SMS மற்றும் மின்னஞ்சல் அறிவித்தல்கள் அனுப்பப்படுகின்றன.

தகுதி நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த அட்டையில் 250,000 அமெரிக்க டொலர் வரையிலான இலவச பயணக் காப்பீடும் உள்ளது. இது பயணிகளுக்கு கூடுதல் பாதுகாப்பை அளிக்கிறது. மாஸ்டர்காட்டால் அங்கீகரிக்கப்பட்ட இந்த அட்டை, உலகளவில் நான்கு மில்லியனுக்கும் அதிகமான ATM-களிலும், 40 மில்லியன் கடைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. பொருட்கொள்வனவு, உணவகங்களில் உணவு உண்ணுதல், தீர்வையில்லாப் பொருட் கொள்வனவு (duty-free purchases) அல்லது வெளிநாட்டு வணிகர்களுக்கு இணையவழி பணம் செலுத்துதல் என எதுவாக இருந்தாலும், இது ஒரு தடையற்ற மற்றும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டணத் தீர்வை வழங்குகிறது.

அட்டைதாரர்கள் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணத்தை மீள் நிரப்பிக்கொள்ளலாம் (reload). வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் தொலைவிலிருந்து பணத்தை மீள் நிரப்பும் சிறப்பு வசதி உள்ளது. இதனால், அவர்கள் படிக்கும் காலத்தில் தடையின்றி பணம் கிடைப்பதை இது உறுதி செய்கிறது.

இந்த அட்டை வணிகப் பயணிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், விமானிகள் போன்ற தொழில் வல்லுநர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாகி வருகிறது. அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு விதிகளின் கீழ் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கை கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கும் இது கிடைக்கிறது.

இலங்கை வங்கி பல நாணயப் பயண அட்டை, புதுமை மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைக்கான வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. இது இலங்கையர்களுக்கு தங்கள் பயணச் செலவுகளை நிர்வகிக்க பாதுகாப்பான, திறமையான மற்றும் நவீன வழியை வழங்குகிறது. இதன் மூலம், இலங்கை வங்கி சர்வதேசப் பயணிகளுக்கான நம்பகமான நிதிப் பங்காளியாகத் தொடர்ந்து திகழ்கிறது.

## தென்னங்காணி விற்பனைக்குண்டு

கண்டி வீதி ஆசைப்பிள்ளை ஏத்தம் அருகாமையால் செல்லும் கரம்பகம் வீதியில் 2 Km தூரத்தில் 37 பரப்பு தென்னங்காணி (உறுதிக்காணி) விற்பனைக்குண்டு தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு 077 649 1027

## வேலையாட்கள் தேவை

யாழ் திருநெல்வேலியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவவர்
- பொதிசெய்பவர்
- ரொட்டி, தோசை தயாரிப்பவர்
- கொத்து, றைஸ் தயாரிப்பவர்
- துப்புரவுப்பணியாளர் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும், உணவு தங்குமிடவசதி வழங்கப்படும்

(CS/59473) J-1

தொடர்புகளுக்கு:- 076 607 5615

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த,பழக விரும்பும் ஆண் / பெண் வேலையாள் தேவை.

(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 456 9678

## சொற்பொழிவு

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மகாபாரதம் தொடர் சொற்பொழிவு நிகழ்வு ஆச்சிரம மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. நிகழ்வில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றுவார்.

(ச-25,66)

## காணி விற்பனைக்கு

மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்பு: 077 794 8012

## வேலையாட்கள் தேவை

கொடிகாமத்தில் இயங்கிவரும் ஹோட்டல் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர்கள் இருவர் தேவை.

(CS/59479) J-1

தொடர்பு:- 077 948 4887

இலகுவாக TRAVEL பண்ணுங்கள்

எளிமையாக PAY பண்ணுங்கள்

BOC MULTI CURRENCY TRAVEL CARD



எல்லையின்றி உலகெங்கிலும் TRAVEL செய்யுங்கள்



Travel பண்ணும் போது அனைத்து பணப் பரிவர்த்தனைகளையும் எளிதாகவும், பாதுகாப்பாகவும் மேற்கொள்ளுங்கள்

உங்கள் வெளிநாட்டுப் பயணம், கல்வி, மருத்துவம் அல்லது வணிக விடயங்களுக்காக உலக நாடுகளுக்கு பயணிக்கும் போது BOC MULTI CURRENCY TRAVEL CARD ஐப் பயன்படுத்தி Smart ஆக Pay பண்ணுங்கள்.

விண்ணப்பிக்க Scan செய்யவும்

- 5 வெளிநாட்டு நாணய வகைகளில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளலாம்
- உலகம் முழுவதும் POS, ATM மற்றும் Online பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் வசதி
- USD 250,000 வரை இலவச பயணக் காப்பீடு
- அட்டை மீதி மற்றும் பரிவர்த்தனை விவரங்களை பரிசீலிக்கும் வசதி
- Backup அட்டை இலவசம்
- மாணவர்களுக்கு Remote loading வசதி

உடனடி அழைப்பு: 0770 185 185

1975 BOC

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org